நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 21–ம் நாள் செவ்வாய்க்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 615 / 2023

CNR.No.TNTT07-014409-2023

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண். 8/2023 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரிகளின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | 1. மகாராஜா<br>2. கிருஷ்ணசாமி<br>3. செல்வராணி |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | 1. கிருஷ்ணசாமி<br>2. மாடசாமி<br>3. கிருஷ்ணசாமி |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | 1. கிழக்கு தெரு, ஆவுடையார்புரம், காப்புலிங்கம்பட்டி, கயத்தார், தூத்துக்குடி.<br>2. கிழக்கு தெரு, ஆவுடையார்புரம், காப்புலிங்கம்பட்டி, கயத்தார், தூத்துக்குடி.<br>3. கிழக்கு தெரு, ஆவுடையார்புரம், காப்புலிங்கம்பட்டி, கயத்தார், தூத்துக்குடி. |
| 7 | வயது | 1.24/2023<br>2. 50/2023 |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:26:53 +0530

| | | |
|---|---|---|
| | | 3. 42/2023 |
| | தேதி | |
| 8 | சம்பவம் | 05.09.2022 முதல் |
| 9 | புகார் | 17.08.2023 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரிகள் கைது செய்யப்படவில்லை. |
| 11 | பிணை விபரம் | எதிரிகள் கடந்த 11.08.2023 ஆம் தேதி Crl.M.P. No.4979/2023–ல் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுள்ளார்கள். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 03.10.2023 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 20.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இதச பிரிவு 498A படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் இல்லை என எதிரிகளை விடுதலை செய்து குவிமுச பிரிவு 248(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 07.09.2023 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. மணிகண்ட நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:26:59 +0530

வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 20.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரிகள் மீது கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 05.09.2022 ஆம் தேதி கயத்தார் அருள்மிகு கோதண்ட ராமேசுவரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், திருமணம் முடிந்த நாளிலிருந்து 2 வது எதிரிக்குரிய காப்புலிங்கம்பட்டி ஆவுடையாள்புரத்திலுள்ள இரண்டு வீடுகளில் தனியாக தெற்கு பார்த்த வீட்டை சாட்சி 1க்கு ஒதுக்கி கொடுத்து 1 வது எதிரி, சாட்சி 1ம் கணவன் மனைவி வாழ்ந்த நிலையில் 1 வது எதிரி ஒரு கணவனாக சாட்சி 1 ஆன மனைவிக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவைகளை கூட செய்தது கிடையாது. வெளியில் எங்கும் அழைத்து சென்றது கிடையாது. 1 வது எதிரிக்கு திருமணத்திற்கு முன்பே மது குடிக்கும், புகைபிடிக்கும் பழக்கம் இருந்து வந்ததால் தினசரி வீட்டுக்கு வரும் போது மதுகுடித்துவிட்டு வந்ததால் சாட்சி 1, 1 வது எதிரியின் உடல்நலத்தை கருத்தில் கொண்டு குடிப்பழக்கத்தை விட்டு விடுமாறு கூறியதற்கு 1 வது எதிரி, சாட்சி 1யை இடது கன்னத்தில் அடித்தும், தேவிடியா புண்ட மகளே உன் ஆத்தல ஓக்க என கெட்ட வார்த்தைகளால் திட்டி உடலளவிலும், மனஅளவிலும் கொடுமைபடுத்தியும், இந்த சம்பவம் அனைத்தும் தெரிந்த 2, 3 வது எதிரிகள், 1 வது எதிரிக்கு ஆதரவாக இருந்து கொண்டு சாட்சி 1 யிடம் அவன் சந்தோசம் தான் எங்கள் எந்தோசம், அவன் விருப்பப்படி நடந்துக்கோ, நீ அவன மாத்த முடியாது, நீ அவன் போக்குப்படி போ இல்லைன்னா, நீ வாழ முடியாது என்றும், எப்போதும் குறை சொல்லிக் கொண்டிருந்தார். நீ ராசாத்தி போல் இருக்கனும் என்று நெனச்சா இங்கு கதைக்கு ஆகாது. வீட்டு வேலைகள் அனைத்தையும் நீ தான் செய்ய வேண்டும் என்று செண்பகவல்லியை உடலளவிலும், மனஅளவிலும் துன்புறுத்தியுள்ளனர்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:04 +0530

2) 1வது எதிரி அடிக்கடி குடிபோதையில் வந்து சாட்சி 1யை அடிப்பது அசிங்கமான வார்த்தைகளால் திட்டுவது போன்று தொடர்ந்து கொடுமைகளை செய்துள்ளார். ஒரு சராசரி மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவு கூட இல்லாதவராக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வரும் பெண்களின் அழகை வர்ணிப்பது அவர்களை போல் சாட்சி 1 அழகாக இல்லை என் கூறி அநாகரிகமாகவும், அசிங்கமாகவும் பேசி சாட்சி 1யை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கிய நிலையில் என்றாவது ஒரு நாள் 1வது எதிரி வாழ்க்கையை புரிந்து கொண்டு மனம் திருந்தி சந்தோசமாக வாழ்வார் என்ற நம்பிக்கையிலும், சாட்சி 1ன் வாழ்க்கை பாழாகிவிடக்கூடாது என்று பயந்தும், 1வது எதிரி வீட்டார் சொல்வதற்கெல்லாம் வேறு வழியின்றி தலையசைத்து வாழ்ந்து வந்துள்ளார். ஆனால், 1வது எதிரி மற்றும் 2, 3வது எதிரிகள் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

3) அதன்பிறகும் 1வது எதிரி தினமும் குடித்துவிட்டு சாட்சி 1யிடம் பிரச்சனை செய்து, சாட்சி 1யை ராசியில்லாதவள் என்றும், வீட்டிற்கு வந்ததால் தரித்திரம் தொற்றிக் கொண்டது என்றும், காது படவே 3வது எதிரி திட்டி மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் செத்து தொலை என்று பலமுறை சாட்சி 1யை தற்கொலைக்கு தூண்டியுள்ளார். சாட்சி 1க்கு நடந்த கொடுமைகளை தெரிந்த சாட்சி 2 12.04.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு சாட்சி 1 குடியிருக்கும் ஆவுடையாள்புரம் வீட்டிற்கு சென்று 2, 3வது எதிரியிடம், 1வது எதிரியின் செயல் பற்றி கேட்டதற்கு புள்ளையா பெத்திருக்க சும்மா குறை செல்லிக்கிட்டே இருக்கா, ஆம்பள பசங்க அப்படி இப்படித்தான் இருப்பாங்க, உன் பொண்ணு தான் அட்ஜெஸ்ட் பண்ணி போகனும்னு மரியாதைக் குறைவாக பேசி, சாட்சி 2யை வீட்டை விட்டு வெளியில் அனுப்பி சாட்சி 1, சாட்சி 2க்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளனர்.

4) அன்றைய தினம் இரவு சுமார் 07.00 மணியளவில் சாட்சி 1 இருந்த வீட்டிற்கு சென்று 3வது எதிரி உங்கப்பன்ட்ட சொன்னா பயந்துருவோமா தேவிடியா மகளே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், சாட்சி 1யை இடது கன்னத்தில் அடித்தும், 1வது எதிரியைப் பார்த்து 3வது எதிரி இந்த நாயை அடித்து கொல், இவள் உனக்கு சரிப்பட்டு வரமாட்டா என்று கூறியதும், 1வது எதிரி, 3வது எதிரியின் பேச்சைக் கேட்டு

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:27:09 +0530

சாட்சி 1யிடம் தகராறு செய்து பலமாக முதுகிலும், கன்னத்திலும் மாறி மாறி அடித்தும், கழுத்தை பிடித்து வீட்டிற்கு வெளியே தள்ளி சிராய்ப்பு மற்றும் வீக்கங்காயங்களுடன் வெளியில் அழுது கொண்டு நின்று கொண்டிருந்த சாட்சி 1யை சிறிது நேரம் கழித்து வந்த 1வது எதிரி பைக்கில் அழைத்துச் சென்று இரவு சுமார் 09.00 மணியளவில் கடம்பூர் – கயத்தார் சாலையிலுள்ள அகிலாண்டபுரம் ஊருக்கும் விலக்கிற்கும் இடையில் நடுக்காட்டிற்குள் செல்போனையும் பிடுங்கி வைத்துக் கொண்டு இறக்கிவிட்டு சென்றதாக கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவு 498(A) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் படி கடந்த 03.10.2023 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரிகள் மீது இதச பிரிவு 498(A)) படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 12.10.2023 அன்று எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து குவிமுச பிரிவு 240ன் கீழ் வினவிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று கூறிக்கொண்டார்கள்.

6) இந்த வழக்கில் எதிரிகளும், சாட்சி 1ம் சமாதானமாகி விட்டதாக குவிமுச பிரிவு 320–ன் கீழ் தாக்கல் செய்த எம்.பி. எண்.13/2026 என்ற மனுவானது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது சமரசம் செய்ய முடியாத குற்றச்சாட்டுகள் என்பதால் இந்நீதிமன்றத்தால் கடந்த 06.07.2026 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

7) எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டன.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:14 +0530

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

8) அசா.1 செண்பகவல்லி, புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்று மட்டும் சாட்சியமளித்துள்ளார். அசா.2, அசா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், அசா.1 தனது மகள் என்றும், எதிரிகள் தனது மருமகன் மற்றும் சம்பந்திகள் என்றும், இவ்வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளார்கள். இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 311–ன் கீழான எம்.பி.எண்.14/2026 என்ற மனுவானது கடந்த 16.07.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசா.4 சத்தியபாமா (சிறப்பு உதவி ஆய்வாளர்) கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். கடந்த 23.07.2023 ஆம் தேதி 20.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சித்ரா என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது இந்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அசா.ஆ.2 புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.8/2023, இதச பிரிவுகள் 498–A, 294(பி), 506(2) மற்றும் பிரிவு 4 of DP Act ஆக அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

9) அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் கமலாதேவி, 24.07.2023 அன்று 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாடசாமி என்ற சங்கிலிபாண்டி மற்றும் ஞானையா ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரிகள் மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை. பின்பு 14.07.2023 அன்று வழக்கின் சட்டப் பிரிவை இதச பிரிவுகள் 498A ஆக அசா.ஆ.6 சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை மூலம் பிரிவு மாற்றம் செய்துள்ளார். 16.04.2023 ஆம் தேதியிட்ட அசா.1 கொடுத்த புகார் மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்களின் உண்மை நகல் அசா.ஆ.7 ஆகும். 04.06.2023 ஆம் தேதியிட்ட அசா.1 கொடுத்த புகார் மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:27:19 +0530

இணைந்த ஆவணங்களின் உண்மை நகல் அசா.ஆ.8 ஆகும். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 17.08.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

10) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 20.07.2026 அன்று குவிமுச 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

11) அரசுத் தரப்பில், எதிரிகள் குடும்ப வன்முறை கொடுமை செய்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

12) மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகளைத் தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இந்நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 செண்பகவல்லி தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது கணவர் மற்றும் மாமனார், மாமியார் ஆவார்கள். சம்பவ காலத்தில் எனக்கும், எனது கணவருக்கும் வீட்டில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார்

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:24 +0530

கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையதுதான். **(அந்த கையெழுத்துகள் 7 மட்டும் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார். அசா.2 தனது சாட்சியத்தில்

"1.... அசா.1 எனது மகள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது மருமகன் மற்றும் சம்பந்திகள் ஆவார்கள். சம்பவ காலத்தில் எனது மகளுக்கும். எனது மருமகனுக்கும் வீட்டில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது மிகைப்படுத்தி அசா.1 புகார் கொடுத்தார். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார். அசா.3 தனது சாட்சியத்தில்

"1.... அசா.1 எனது மகள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது மருமகன் மற்றும் சம்பந்திகள் ஆவார்கள். சம்பவ காலத்தில் எனது மகளுக்கும், எனது மருமகனுக்கும் வீட்டில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது மிகைப்படுத்தி அசா.1 புகார் கொடுத்தார். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார்.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:28 +0530

13) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அசா.3 ஆகியோர் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அசா.1 முதல் அசா.2 ஆகியோர் அவர்களது குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அசா.1, எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளார்கள். அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் குடும்ப வன்முறை செய்து கொடுமை செய்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1 முதல் அசா.3 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்திலும், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளைத் தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) முடிவில் அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 498A படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கு குற்றவாளிகள் அல்ல என குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

15) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அதுகுறித்த உத்தரவில்லை.

16) இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைமுறிகளில் குவிமுச பிரிவு 437–ஏ–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி குவிமுச பிரிவு 437–ஏ–ன் படி எழுதிக்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:27:33 +0530

கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 21 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திருமதி. செண்பகவல்லி | புகார்தாரர் சாட்சி |
| 2. | திரு. செல்லத்துரை | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திருமதி. கோமதி | கேள்விப்பட்ட சாட்சி |
| 4. | திருமதி. சத்தியபாமா (சிறப்பு உதவி ஆய்வாளர், கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம்) | புலன்விசாரணை குறித்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் மனுவில் உள்ள அசா.1 ன் 7 கையொப்பங்கள் – 04.06.2023 | அ.சா.1 – 06.07.2026 | அசல் |
| 2 | புகார் மனு – 04.06.2023 | அ.சா.4 – 16.07.2026 | அசல் |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:43 +0530

| | | | |
|---|---|---|---|
| 3 | முதல் தகவல் அறிக்கை – 23.07.2023 | அ.சா.4 – 16.07.2026 | அசல் |
| 4 | பார்வை மகஜர் – 24.07.2023 | அ.சா.4 – 16.07.2026 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் – 24.07.2023 | அ.சா.4 – 16.07.2026 | அசல் |
| 6 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை – 14.07.2023 | அ.சா.4 – 16.07.2026 | அசல் |
| 7 | அசா.1 கொடுத்த புகார்மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் – 16.04.2023 | அ.சா.4 – 16.07.2026 | உண்மை நகல் |
| 8 | அசா.1 கொடுத்த புகார்மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் – 04.06.2023 | அ.சா.4 – 16.07.2026 | உண்மை நகல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:27:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி